(இ) மலை வாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முனவடிவு, 1979.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு மலைவாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழுங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இச்சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பெற்றிருக்கிறது.

(ஈ) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, "1979ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோரு கிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

[முற்பகல் 11-00]

(உ) ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை" பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.